# அரச துறையின் இயலளவைக் கட்டியெழுப்பும் செயற்திட்டம் (புள்ளிவிபர இயலளவை தரமுயர்த்தும் கூறு) - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் உருவாகும் சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாத காலத்திற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிரவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாத காலத்திற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்புகைகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டன என்பதும் 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் ஆதாரத்தின் மீது நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு கட்டுப்பாடுகளிற்கு இணங்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாதத்திற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 222,012 ஆகவும் 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 545,026,231 ஆகவும் இருந்தது. 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாதத்திற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | செலவு | | 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாத காலத்திற்கான | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **மூலதனம்** | | | |
| காணி | - | - | 100,000,000 |
| சிவில் வேலைகள் | - | 41,662,337 | 104,018,475 |
| வடிவமைப்பு ஆலோசனை | - | 3,754,330 | 14,186,940 |
| அலுவலக உபகரணங்கள் | - | 68,115,277 | 101,977,540 |
| தளபாடமும் பொருத்திகளும் | - | 6,695,471 | 15,936,803 |
| **மீண்டுவருவன** | | | |
| பயிற்சி | - | 56,423,884 | 157,067,556 |
| நிர்வாகச் செலவினம் | - | 6,238,849 | 14,728,392 |
| காகிதாதிகள் | 222,012 | 619,581 | 1,057,394 |
| போக்குவரத்து | - | 882,331 | 1,493,405 |
| நானாவித செலவினம் | - | 281,146 | 1,309,433 |
| ஆலோசணை | - | 33,250,293 | 33,250,293 |
| மொத்தம் | 222,012 | 217,923,499 | 545,026,231 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு –கணக்கு இல. (எஸ்எல் 137)

செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த மூன்று மாதத்திற்காகவும் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகவும் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட விசேட (டொலர்) கணக்கின் செயற்பாட்டுப் பொழிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரங்கள்** | **2012 மார்ச் 31 இல் முடிவுற்ற மூன்று மாத காலத்திற்கான** | | **2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான** | |
|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர்** | **ரூபா** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,047,814 | 119,347,351 | 880,815 | 97,729,067 |
| கூட்டு | | | | |
| மீள்நிரப்பல்கள் | இல்லை | இல்லை | 1,410,000 | 156,476,724 |
| அந்நிய செலாவணி இலாபம்/ (நட்டம்) | - | 1,082,130 | - | 2,700,832 |
| | 1,047,814 | 120,429,481 | 2,290,815 | 256,906,623 |
| கழி | | | | |
| பற்றுதல்கள் | 972,309 | 110,750,678 | 1,243,001 | 137,559,272 |
| திசெம்பர் / மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 75,505 | 9,678,803 | 1,047,814 | 119,347,351 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.1** மீளாய்வாண்டின் 3 மாத காலத்தில் குறிப்பிடக்கூடிய வேலைகள் எதுவும் காணப்படாத போதிலும் 8 உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு ரூபா 597,820 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த செலவினங்கள் கணக்குகளுக்குக் கொண்டவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயலாற்றல்

2012 மார்ச் 31 இல் உள்ளவாறு பின்வரும் வகைகளுக்குரிய நிதிசார் செயல்முன்னேற்றங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செலவின வகை | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | உள்ளவான செலவினம் ரூபா.மில்லியன் | செயல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 01. | வேலைகள் | 898.0 | 218.2 | 24.3 |
| 02. | பொருட்கள் | 158.3 | 117.9 | 74.5 |
| 03. | ஆலோசணை | 192.7 | 33.2 | 17.2 |
| 04. | பயிற்சி | 285.4 | 157.1 | 55.0 |
| 05. | செயற்திட்ட முகாமைத்துவம் | 39.2 | 18.6 | 47.4 |
| | மொத்தம் | 1,573.6 | 545 | 34.6 |

**3.3** 2008 செப்தெம்பர் இல் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், நிலஅளவை வேலைகள் மற்றும் காணியை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றுக்கு ஏற்படும் செலவினங்களுக்காக ரூபா 100 மில்லியன் முற்பணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செலவினங்களைக் கழித்துக் கொண்டு மீதிப் பணம் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.